# சென்னை போன்ற நகரங்களில் தேனீ வளர்ப்பு பிசினஸ் சாத்தியமா?

ஜெனி ஃப்ரீடா 3 Min Read

**பிசினஸ் பெண்கள்... Plan முதல் Profit வரை - 7**

Published: Today at 5 AM Updated: Today at 5 AM



தேனீ வளர்ப்பு

Join Our Channel 0 Comments Share



சென்னை போன்ற நகரங்களில் தேனீ வளர்ப்பு பிசினஸ் சாத்தியமா?

Listen to Vikatan stories on our AI-assisted audio player

**இல்லத்தரசிகள்,** மாணவர்கள், மாதச் சம்பளத்தில் வேலை பார்ப்பவர்கள் என வயது வித்தியாசமின்றி பலருக்கும் ஒரு பிசினஸ் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். எங்கிருந்து தொடங்குவது, எப்படித் தொடங்குவது, லாபகரமாக நடத்த முடியுமா என்பன போன்ற குழப்பங்களுக்குத் தீர்வுகாண முடியாமல் பிசினஸ் தொடங்குவதைத் தாமதித்துக்கொண்டே வருவார்கள். இதுபோன்ற குழப்பங்களுக்குத் தீர்வளித்து வெற்றிகரமான தொழில்முனைவோராக மாற்ற உதவுவதே `பிசினஸ் பெண்கள்: Plan முதல் Profit வரை' தொடரின் நோக்கம்.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அனுப்பர்பாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர் கவிதா. `Aara Honey Bee Farm' என்ற பெயரில் 2018-ம் ஆண்டு முதல் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டு வருகிறார்.

எம்பிஏ பட்டதாரியான இவர், எட்டு ஆண்டுகள் பார்த்த வேலையை விட்டுவிட்டு தேனீ வளர்ப்பை கரியராக மாற்றிக் கொண்டார். தேன் உற்பத்தியுடன், தேனீ வளர்ப்புப் பயிற்சியும் அளித்து வருகிறார். தேனீ வளர்ப்பை வருமானம் ஈட்டும் தொழிலாக மாற்றுவது பற்றி தன்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கிறார் கவிதா.

``விழிப்பு உணர்வு அதிகரித்திருப்பதால் தேன் பயன்பாடு மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. மகரந்தச் சேர்க்கைக்கு தேனீக்கள் உதவுவதால் அவற்றை வளர்ப்பதில் விவசாயிகள் அதி காட்டி வருகின்றனர். தேன் உற்பத்தி யோடு தேனீ வளர்த்து விற்பனை செய்வதிலும் கவனம் செலுத்தினால் நல்ல வருமானம் கிடைக்கும். தேனீ வளர்ப்பில் ஈடுபட விரும்பு பவர்கள் முதலில் முறையான பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

Open App

வேளாண்துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், ஒவ்வொரு மாவட்டத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்திலும் பயிற்சி வழங்கப்படுகிறது. இதுதவிர, தேனீ வளர்ப்பில் ஈடுபடுபவர்களும் பயிற்சி அளிக்கிறார்கள்.

4.7 / 5 Rating
3.5M+ Downloads
Audio Magazines
Instant News Summary
Free 500+ Audio Books
Low Data Usage
GET IT ON App Store
GET IT ON Play Store
INSTALL APP & GET 30 DAYS FREE TRIAL
GET IT ON App Store
GET IT ON App Store
INSTALL APP



### இரண்டு பெட்டிகள்

தேனீ வளர்ப்பில் முதலில் இனப்பெருக்கம் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். முதல் ஓராண்டுக்கு இனப்பெருக்கம் செய்வதில் அதிக கவனம் வேண்டும். இனப்பெருக்கத்தைக் கற்றுக் கொண்ட பிறகு பெட்டிகளின் எண்ணிக்கையை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கலாம். தேனீக்கள் கூட்டமாக இருப்பதை, `காலனி' என்பார்கள். சரியாக உணவு கொடுத்துப் பரா மரித்தால் ஒரு பெட்டியில் இருக்கும் காலனியை இரண்டு மாதங்களுக்குள் இரண்டாகப் பிரிக்க லாம். ஒரு வருடத்துக்கு குறைந்தபட்சம் மூன்று முறை ஒரு பெட்டியிலிருந்து இதே போல இனப்பெருக்கம் செய்யலாம். இரண்டாம் ஆண்டில் இருந்து தேன் உற்பத்தியில் ஈடுபட வேண்டும்.

Open App

### அதிக முதலீடு தேவையா?

இரண்டு காலனிகளுடன் கூடிய இரண்டு தேனீ பெட்டிகள், தேன் பிரித்தெடுக்கும் கருவி, தேனீக்கள் தாக்காமல் இருக்க முகத்தை கவர் செய்யும் முகமூடி, புகைப்பான் என 10,000 ரூபாய் முதலீட்டில் தொடங்கலாம். பொதுவாக ஜனவரி முதல் ஜூன் வரைதான் தேன் அதிகம் கிடைக்கும். அதற்கு இடைப்பட்ட காலத்தில் தேன் அதிகம் கிடைக்காது. அந்தச் சமயத்தில் இனப்பெருக்கம் செய்வது, பெட்டிகள் பராமரிப்பது போன்ற வேலைகளைச் செய்ய லாம். ஒரு பெட்டியில் இருந்து மாதம் இரண்டரை கிலோ வரை தேன் எடுக்க முடியும். ஒரு கிலோ தேன் 500 ரூபாய் வரை விற்பனையாகிறது.

இனப்பெருக்கம் செய்வதன் மூலம் ஒரு காலனி இருக்கும் பெட்டியை 2,500 ரூபாய்க்கு விற்பனை செய்ய முடியும்.



### பதிவு முக்கியம்

Open App

FSSAI, மத்திய அரசின் சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கான `உத்யம்' என்ற திட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும். இவற்றை ஆன் லைனில் அப்ளை செய்ய முடியும். நாம் உற்பத்தி செய்யும் தேனை அருகிலிருக்கும் ஆய்வகத்தில் கொடுத்து அதிலிருக்கும் ஊட்டச்சத்து விவரங்களைப் பெற்றுக்கொள்வது, தயாரிப்பு களை பிராண்டிங் செய்ய உதவும். இதுபோன்ற சான்றிதழ்களுடன், தேனீ வளர்ப்புப் பயிற்சி பெற்ற சான்றிதழும் இருக்கும்போது வங்கியில் எளிதில் கடன் கிடைக்கும். மாவட்ட தொழில் மையத்தில் மானியத்துடன் கடன் பெற முடியும்.

### சொந்த இடம் இல்லாதவர்கள்...

ஓர் ஏக்கருக்கு 10 தேனீ பெட்டிகள் வைக்க லாம். சொந்தமாக இடம் இல்லை என்றால் அருகில் உள்ள விவசாயிகளிடம் பேசி அவர்கள் நிலத்தில் பெட்டிகளை வைத்துக் கொள்ளலாம். மகரந்தச் சேர்க்கை அதிகரிக்கும் என்பதால் விவசாயிகள் இதற்கு உடனே ஒப்புக் கொள்வார்கள்.

### சவால்கள்

தேனீக்கள் இரண்டிலிருந்து மூன்று கிலோ மீட்டர் வரை பறந்து சென்று தேன் எடுத்து வரும். அப்போது அவற்றை தொந்தரவு செய்யும் வகையில் பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்கப் பட்டிருந்தால் அவை இறந்து விடும்.

பொதுவாக, ஒரு காலனியில் 40 சதவிகித பூச்சிகள் தேனைச் சேகரித்து வரும். பூச்சிக்கொல்லி மருந்துகளால் பாதிக்கப்பட்டு உயிர் பிழைக்கும் பூச்சிகள் பெட்டிக்குத் திரும்பும்போது அந்தப் பெட்டி

முழுவதும் பூச்சிக்கொல்லி மருந்து பரவி விடும். இதனால் அங்கிருக்கும் தேனீக்களுக்கும் தொந்தரவு ஏற்பட்டு இறந்துவிட வாய்ப்பு உள்ளது.

வைரஸ் தொற்று, தட்ப வெட்பநிலை, அந்துப்பூச்சி, குளவி, பல்லி போன்றவற்றின் தொந்தரவு, விலங்குகள் தொந்தரவு போன்ற காரணங் களால் தேனீக்கள் ஓடிப் போகவோ, தொற்று ஏற்பட்டு பாதிக்கப்படவோ வாய்ப்புள்ளது. இந்தப் பிரச்னைகளை எல்லாம் கையாளக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த அனுபவத்தை எல்லாம் கற்றுக்கொள்ள மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் ஆகிவிடும்.




**விற்பனை செய்வது எப்படி?**

பயிற்சி பெறுவது, பயிற்சி பெறும் அமைப்புடன் தொடர்பில் இருப்பது போன்ற வற்றின் மூலம் நாம் இந்த பிசினஸில் இருப்பது பரவலாக வெளியில் தெரியும்.

வேளாண்துறை, வேளாண் பல்கலைக்கழகம், இயற்கை விவசாயம், ஆர்கானிக் உணவுகள் தொடர்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடை பெறுகின்றன. அவற்றில் கடைகள் போடலாம். தேனீ வளர்ப்புப் பயிற்சி கொடுக்கலாம். இதன் மூலமாக நம் தொடர்புகள் விரிவடையும். பயிற்சி பெறுபவர்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை நம்மிடமே வாங்கிக் கொள்ளவும் வாய்ப்புள்ளது.

தேனீக்களை இரவில்தான் ஓரிடத்திலிருந்து மற்றொரு தோட்டத்துக்குக் கொண்டு செல்ல முடியும். அதற்கென்று மனிதவளம் தேவைப் படலாம். ஆரம்பத்தில் குடும்பத்துடன் சேர்ந்து இதில் ஈடுபடலாம். தொழில் விரிவடைந்த பிறகு ஊழியர்களை நியமித்துக்கொள்ளலாம்.

- கேண்டில் மேக்கிங் பிசினஸ் செய்வது எப்படி?

*- அடுத்த அத்தியாயத்தில்...*

**நகரத்தில் அதிக தேன் கிடைக்கும்!**

மாடித் தோட்டத்தில் இரண்டு பெட்டிகள் வரை வைக்கலாம். தங்கள் வீடுகளில் நிழலான பகுதியில், இரவில் வெளிச்சம் இல்லாத பகுதியில் வைக்க வேண்டும். வெளிச்சம் அதிகமாக இருந்தால் தேனீக்கள் பெட்டியை விட்டு வெளிச்சத்தை நோக்கி சென்றுவிடும். மீண்டும் அந்தப் பெட்டிக்கு திரும்பி வராது. தெருக்களில் உள்ள மரங்கள், அழகுக்காக வளர்க்கப்படும் பூச்செடிகளில் தேனீக்கள் சென்று தேனைச் சேகரித்து வரும். தோட்டங்களில் வைப்பதை விட நகர்ப்புறங்களில் அதிக அளவில் தேன் கிடைக்கும். ஒரு பெட்டிக்கு மூன்று கிலோ தேன் வரை எடுக்கிறார்கள். விவசாய நிலங்களில் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு இருக்கலாம். தெருக்களில் வளரும் மரங் களில் பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடு இருக்காது என்பதால் அதிக அளவில் தேன் கிடைக்கும்.

வி

**இதில் பின்னூட்டம் இடுபவர்களின் கருத்துகள் அவரவர் தனிப்பட்ட கருத்து, விகடன் இதற்கு பொறுப்பேற்காது.**

**What is your reaction?** 1 Vote

Open App

| Happy | Love | Rofl | Sad | Angry | Unmoved |
|---|---|---|---|---|---|
| 100% | 0% | 0% | 0% | 0% | 0% |

**கவிதாவின் தேனீ வளர்ப்புப் பயிற்சி நிறுவனத்தின் பெயர் என்ன?**

3 Log in

TM